# இந்தியபுலனாய்வுகுழுவிற்குஇலங்கைஉதவவில்லை

விலை ரூபா 4-50

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 33 ஆனி 14 துல்ஹஜ் 15 இதழ் 137

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 28-06-1991

(புதுடில்லி) ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக இலங்கையில் விசாரணை மேற்கொள்வதற்கென சென்ற இந்திய புலனாய்வுக்குழுவினருக்கு இலங்கை அரசு ஒத்துழைப்பு வழங்கவில்லை என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது. [4-ம் பக்கம் பார்க்க]

## ஈழ அகதிகள் அருந்தும் நீரில் நஞ்சு கலக்க முயற்சி!

(சென்னை) தமிழகத்திலுள்ள அகதி முகாம்களில் தங்கியிருக்கும் இலங்கைத் தமிழர் அருந்தும் நீரில் நஞ்சுகலக்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. இனம்தெரியாத குழுவினர் இம்முயற்சியில் ஈடுபட முயற்சி [4ம் பக்கம் பார்க்க]

## 1990-ல் விண்ணப்பிக்காதோர் விசேட பரீட்சைக்கு தோற்றலாம்

(யாழ்ப்பாணம்) 1990ம் ஆண்டு நடைபெறாத கல்விப் பொதுத் தராதரம் சாதாரண பரீட்சைக்கு விண்ணப்பிக்காதவர்கள் 1991ம் ஆண்டு நடைபெறப்போகும் விசேட பரீட்சையில் பங்கு (4ம் பக்கம் பார்க்க)

### இரகசியத்தகவல் கிடைத்திருப்பதாக எச்சரிக்கை!

# கொழும்பு நகரில் மீண்டும் இரு குண்டுகள் வெடிக்கலாம்

## முக்கிய இடங்களில் படையினர் குவிப்பு; மக்கள் அச்சம்

(கொழும்பு)

கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தின் மீது அண்மையில் நடத்தப்பட்ட வெடிகுண்டுத்தாக்குதல் போன்று மேலும் இரு குண்டுத்தாக்குதல்கள் விரைவில் நடத்தப்படலாம் என்று விசேட பொலிஸ் பிரிவினர் எச்சரிக்கை செய்துள்ளனர்.

இத்தாக்குதல்களை நடத்த புலிகள் இரு வாகனங்களைத் தயார்செய்துள்ளார்கள் என்று தமக்கு நம்பத்தகுந்த தகவல்கள் கிடைத்துள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கூட்டுப்படைத் தலைமையகம் மீது நடத்தப்பட்ட குண்டுத் தாக்குதல் தொடர்பாக விசாரணை நடத்திவரும் விசேட பொலிஸ் குழுவினருக்கே இத்தகவல்கள் கிடைத்துள்ளன.

இக்குண்டுகள் எங்கே எப்பொழுது வெடிக்கவைக்கப்படலாம் என்பதுபற்றி தெரிவிக்க முடியாதுள்ளதால் பொதுமக்கள் விழிப்புடன் இருக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த எச்சரிக்கையை அடுத்து கொழும்புநகரில் வாகனங்கள் மீது தற்பொழுது தீவிர பரிசோதனை செய்யப்பட்டுவரு (4ம் பக்கம் பார்க்க)

## மேலும் பல கொள்ளையர்கள் புலிகளினால் கைது!

(யாழ்ப்பாணம்) வடமாகாணத்தில் கொள்ளைகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கண்ணன் கைதுசெய்யப்பட்டதைத் தொடர்ந்து அவனது குழுவைச் சேர்ந்த கொள்ளைகாரர்கள் கைதாகிவருவது அனைவரும் அறிந்ததே. கண்ணனுடன் சேர்ந்து கொ (4-ம் பக்கம் பார்க்க)

## சிறிலங்கா ராணுவத்தில் 'புளொட்' உறுப்பினர்கள்

(கொழும்பு) 'புளொட்' உறுப்பினர்கள் பலர் ஸ்ரீலங்கா இராணுவத்துடன் இணைந்து பணியாற்றி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மாலைதீவு சதிமுயற்சியில் ஈடுபட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்த 'புளொட்' அமைப்பைச் சேர்ந்த 33 (4-ம் பக்கம் பார்க்க)

## ராஜீவ்காந்தி கொலை கொக்குவில் இளைஞர் கைது

(சென்னை) ராஜீவ் காந்தி கொலை தொடர்பாக கொக்குவிலைச் சேர்ந்த ஜெயக்குமார் (வயது-29) என்னும் வாலிபர் நேற்று முன்தினம் சென்னையில் மத்திய குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

ராஜீவ் காந்தி கொலையில் சம்பந்தப்பட்டவராகக் கருதப்படும் ஒற்றைக்கண் சிவராஜன் அவரது சகாக்களான சுபா, தனு ஆகியோருக்குத் தங்குவதற்கு தனது வீட்டில் (4-ம் பக்கம் பார்க்க)

## பிறப்புச்சான்றிதழ் வேலை துரிதமாக நடைபெறும்

(யாழ்ப்பாணம்) யாழ். செயலக மாவட்ட பதிவாளர் அலுவலகத்துக்கு நேற்று ஜெனரேட்டர் கொழும்பிலிருந்து யாழ். அரச அதிபர் திரு கா. மாணிக்கவாசகரால் கொண்டுவரப்பட்டதையடுத்து பிறப்புச் சான்றிதழ்கள் வழங்கும் வேலைகள் துரிதகெதியில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்டத்தில் 27 ஆயிரம் பிறப்புச் சான்றிதழ் விண்ணப்பங்கள் தேங்கிக்கிடப்பது குறிப்பிடத்தக்கது (153)

## கூட்டுப்படைத் தலைமையக தாக்குதல்திருப்தியளிக்கிறது

(பாரிஸ்) கொழும்பு கூட்டுப்படைத் தலைமையகத்தின் மேற்கொள்ளப்பட்ட குண்டுத் தாக்குதல் தமக்குத் திருப்தியளிப்பதாக பாரிஸில் உள்ள விடுதலைப்புலிகளின் பேச்சாளர் திரு லோறன்ஸ் திலகர் கூறியுள்ளார்.

அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் கூறியதாவது: (4ம் பக்கம் பார்க்க)

## அனுராதபுரத்தில் புலிகள் தாக்குதல்

(கொழும்பு) அனுராதபுரத்தில் ரோந்தில் ஈடுபட்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவம் மீது நேற்று விடுதலைப் (4-ம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் 7,500 தமிழர்கள் காணமல் போயுள்ளனர்!

(மட்டக்களப்பு) கிழக்கு மாகாணத்தில் கடந்த வருடகால எல்லைக்குள் ஸ்ரீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுள்ளவர்களில் இதுவரை 7,500 தமிழர்கள் காணமற் போயுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் மட்டும் கடந்த வருடம் யூன் மாதம் 11-ம் திகதி யுத்தம் ஆரம்பிக்கப்பட்டதில் இருந்து இன்றுவரை 8,800 தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டு பின்னர் காணமற் போயுள்ளதாகக் கூறப்படுகிறது: காணமற்போனவர்களின் (4-ம் பக்கம் பார்க்க)

## வீதியில் ஏற்படும் விபத்தினை தடுப்பதற்கு ஆலோசனை

(யாழ்ப்பாணம்) வீதிகளில் செல்லும்போது விபத்துக்கள் ஏற்படாதவாறு தடுப்பதற்கு முன்வருமாறு பொதுமக்களை தமிழீழ காவல் துறையினர் கேட்டுள்ளனர்.

இதுதொடர்பாக தமிழீழ காவல் துறையினரின் போக்குவரத்து பிரிவு முன்வைத்துள்ள விதிமுறைகள் வருமாறு: வீதிகளில் பக்கம் பக்கமாக துவிச்சக்கரவண்டிகளில் செல்வதால் எண்ணற்ற வீதிவிபத்துக்கள் ஏற்படுகின்றன. எனவே வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு ஒருவர்பின் ஒரு (4-ம் பக்கம் பார்க்க)

## பாஸ்போட் விண்ணப்பம் உடனடியாக ஏற்கமுடிவு

(யாழ்ப்பாணம்) குடிவரவு, குடியகல்வுத் திணைக்களத்தால் வழங்கப்படும் பாஸ்போட்டுக்கு யாழ். மாவட்டத்திலிருந்து விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகளின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப்பிரதிகளுக்கு யாழ். அரச அதிபர் அல்லது [4ம் பக்கம் பார்க்க]

## கஷ்ட நிவாரண பணம் விரைவில் கிடைக்கும்

(யாழ்ப்பாணம்) வடக்கு மாகாணத்தில் கடமையாற்றும் அரச-திணைக்கள ஊழியர்களுக்கு மிக விரைவில் கஷ்ட நிவாரணப் பணம் (4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

பழைய பேப்பர்கள், புத்தகங்கள், உரப்பைகள், சீமெந்து வெற்றுப்பைகள், உரப்பைகள் நியாய விலையில் வாங்கப்படும் இருப்பவர்கள் தொடர்பு கொள்ளவும்:- இல. 86, செம்மா தெரு, யாழ்ப்பாணம். (ஏ 1406)

### "மீரா" நாவல்கள்

இன விடுதலையை மையமாக வெளிவந்துள்ளவை ரகிகரன், அக்கினி, ருள்முடி மன்னர்கள் விற்பனையாகின்றது. திருக்கணிதம் சாவகச்சேரி, யாழ்ப்பாணத்தில் பிரபல புத்தகசாலைகளில். (இ-4915)


## வெற்றிடம் நிரப்பப்படும்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள அரச திணைக்களங்களில் காணப்படும் வெற்றிடங்கள் நிரப்பப்படவுள்ளன. இதற்காக எதிர்வரும் 29-ம் திகதி விண்ணப்பதாரிகட்கு பரீட்சை நடைபெறவுள்ளது.

இந்த வெற்றிடங்களை நிரப்ப விண்ணப்பங்கள் கோரப்பட்டபோது 7 ஆயிரத்து 965 விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் கே. தர்மலிங்கம் தெரிவித்தார். (பூ)

## சட்டபேரவைத் தலைவர்

(சென்னை)

தமிழக காங்கிரஸ் சட்டப் பேரவைத் தலைவராக திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று முன்தினம் சத்திய மூர்த்தி பவனில் நடைபெற்ற காங்கிரஸ் (ஐ) கட்சி உறுப்பினர்களின் கூட்டத்திலேயே மேற்படி தலைவர் தெரிவு நடைபெற்றது. (ஐ)

யாழ். பல்கலைக்கழக

# மருத்துவ பீட பரீட்சை முடிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் எம்.பி.பி.எஸ் மூன்றும் வருடம் மே 1991 பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன.

மேற்படி பரீட்சையில் முதலாம் பிரிவில் சித்தியடைந்தோர் வருமாறு:

செல்வி எஸ். டி. அந்தோனிமுத்து, கே. உமாபதி.

இப்பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

செல்வி ஐ. ஏ. ஏ. பேரீடின், ரி. திருவல்லவன்

சித்தியடைந்தோர் விபரம் வருமாறு-

எஸ். செல்வரஞ்சன், செல்வி ஆர். குஞ்சித்தம்பி, ரி. ஜெயதரன், செல்வி கி. நடராஜா, ஏ. சபேசன், ஏ. சண்முகநாதன், கே. சுந்தரலிங்கம், கே. அருளானந்தம், செல்வி ஏ. செல்லையா, செல்வி சி. வரபதேவன், செல்வி டி. நவரத்தினம், எஸ். ஜெயகுமார், ரி. ஜெயகுமார், செல்வி கே. சிவானந்தம், ஆர். சேகவன், ரீ. வேதீஸ்வரன், செல்வி கே. சண்முகதாஸ், செல்வி எம். சிவகுருநாதன், செல்வி எம். சிவதாசன், செல்வி வை. நமசிவாயம், வி. நல்லைநாதன், செல்வி எஸ். ராஜசேகரம், செல்வி கே. பொன்னுத்துரை, வி. ராஜசேகரன், ஏ. சத்தியசீலன், கே. சிவகாந்தன், செல்வி பி. சுமதி, எஸ். சுவேந்திரன், எஸ். சுதன், கே. உமாபதிசிவம், எஸ். ஏ. வின்சன்ட், செல்வி வி. இருபராஜா.

யாழ். பல்கலைக்கழக எம். பி. பி. எஸ். இரண்டாவது வருட ஜூன் 1991 பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளது.

மேற்படி பரீட்சையில் செல்வி என். நகுலசிங்கராசி தினம் முதலாம் பிரிவில் சித்தியடைந்துள்ளார்.

இப்பரீட்சையில் இரண்டாம் பிரிவில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு செல்விகள் கி. எஸ். பாக்கியநாதன், ஐ. கி. ராஜசூரியர், ஐ. தெய்வேந்திரன், எம். ஜி. கணேசமூர்த்தி, எஸ். எஸ். நவரத்தினம், எஸ். சாம்பசிவம், எஸ். சிவபாலசிங்கம், எஸ். சண்முகநாதன், ரி. பரமேஸ்வரன், ரி. கார்த்திகேசு, என். யோகநாயகம்.

மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

எம். ஐங்கரன், செல்விகள் ஏ. சரவணபவானந்தம், பி. நவரத்தினம், ஜி. தெய்வேந்திரன், கே. கணேசன், எஸ். எம். இன்னுசிமுத்து, ஆர். இராஜதுரை, எஸ். நடராசா, எஸ். குணநாயகம், எஸ். சித்திரவேலாயுதம், ஆர். எஸ். யோகசீலன், எஸ். வர்ணகுலசிங்கம், எஸ். சுசீலாதேவி, ரி. குமரகுருநாதன், வி. சிவசுப்பிரமணியம், திரு ஆர். பதிமராஜா, எம். பிரபாகரன், கியூ. ஆர். தேவதாசன், வி. சுதாகரன், கே. திராகேசன், கே. சிவஞானன்.

மேற்படி பரீட்சையில் நான் சித்தியடைந்தோர் விபரம் வருமாறு:

ஆர். அருந்தவச்செல்வம், வி. அருட்குமார், வி. பாலகிருஷ்ணன், ஜி. போர்னும் தேவநாயகம், கே. லோகநாதன், பி. மணிவண்ணன், செல்வி ஆர். பொன்னையா, கே. சசிதரன், செல்வி எஸ். நாகேந்திரராஜா, எஸ். கிறிபரஜன், செல்வி எஸ். சுப்பிரமணியம், எஸ். சுகுமாரன், செல்வி ரி. ஆறுமுகம், எம். தனஞ்செயன், வி. எஸ். தேவகுமார், செல்வி ரி. எந்திரத்தம்பி, பி. திருமாறன், செல்வி யூ. சரவணமுத்து, செல்வி வி. நடராஜா, ரீ. நக்கீரன், கே. ஜீவராசன், கே. தயாளன்.

மேற்படி பரீட்சையில் மீள் நான சித்தியடைந்தோர் வருமாறு ஏ. ஜெசித்தமங்கலராணி, ரி. மேரி ஹில்டா (153)

## "கடற்றொழிலாளருக்கு உதவிகளை வழங்குவோம்"

(வடமராட்சி)

கடற்றொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளையும், ஆலோசனைகளையும் தமிழீழ ஆய்வு நிறுவனம் வழங்கும் என்று தமிழீழ ஆய்வு நிறுவனம் பொறுப்பாளர் ரவி தெரிவித்தார்.

அண்மையில் குடத்தனை அ. த. க. பாடசாலையில் வடமராட்சி கடற்றொழிலாளர் ஒன்றியம் நடத்திய கருத்தரங்கில் பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஒன்றியத் தலைவர் எஸ். சிவாஞானந்தன் தலைமையில் நடைபெற்ற கருத்தரங்கில் ரவி மேலும் பேசுகையில் கூறியதாவது: "இன்றைய கால கட்டத்தில் கடற்றொழிலாளர் படும் கஷ்டம், சிரமம் போன்றவற்றை நாம் நன்கு அறிவோம். இக்கஷ்டங்களில் இருந்து ஓரளவாயினும் அவர்களின் துன்பங்களைக் குறைக்கும் நோக்குடன் தமிழீழ ஆய்வு நிறுவனம் உதவ விரும்புகின்றது.

இதன் காரணமாக மீன்களைப் பதனிடவேண்டிய உப்புக்களையும், சிறுதிவலைகளையும் நாம் கடற்றொழிலாளர்களுக்கு வழங்குவதோடு அவர்கள் பிடிக்கும் மீன்களையும் கருவாட்டினையும் நியாய விலைக்குநாமே கொள்முதல் செய்யவும் விரும்புகின்றோம். எனவே கடற்றொழிலாளர்கள் எம்முடன் இணைந்து செயல்படுமாறு வேண்டுகின்றோம்.

கருத்தரங்கில் எஸ். ரசதா கிருஷ்ணன் பருத்தித்துறை கடற்றொழில் பரிசோதகர்கள் எஸ். தியாகலிங்கம், எஸ். தர்மலிங்கம் ஆகியோரும் கலந்து கொண்டனர். (51)

## சுண்டுக்குளியில்
## தையல் பயிற்சி நிலையம்

(யாழ்ப்பாணம்)

மக்களின் ஒற்றுமையின் அடிப்படையில்தான், அந்தப் பகுதிகளில் ஆரம்பிக்கப்படும் தொழில் பயிற்சி நிலையங்கள் வளர்ச்சியடையமுடியும்.

இவ்வாறு சுண்டிக்குளி சனசமூக நிலைய, மாதர் முன்னணியினரால் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையத்தை நேற்று முன்தினம் யாழ். ஆசனக்கோவில் பங்குத்தந்தை வண. ஜெபநேசன் அடிகள் திறந்து வைத்துப் பேசுகையில் கூறினார்.

மேற்படி சனசமூக நிலைய மாதர் முன்னணித் தலைவி திருமதி தேவராசா இன்பராணி தலைமையில் நடைபெற்ற இத்திறப்பு விழா வைபவத்தில் பாலையூர் சிற்றூர் அவைத் தலைவர் திரு. க. சச்சிதானந்தசிவம், கிராம அலுவலர் ஐ. திருநாவுக்கரசு, சனசமூக நிலையங்களின் சமாசத் தலைவர் எஸ். தியாகராசா, கொய்யாத்தோட்டம் சனசமூக நிலைய மாதர் முன்னணித் தலைவி திருமதி சர்முத்து. ஸ்ரனிஸ்லோஸ், திருவாளர்கள் டி. ஏ. எம். குணசிங்கம் ராசதுரை, தவம் ஆகியோரும் உரையாற்றினர்கள். காரியதரிசி செல்வி பெண்டிற் சுமதி நன்றி கூறினார். (வி)

## சேவைக்கால பயிற்சி வகுப்பு

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தொகுதி தனிப் பாடசாலைகளில் விஞ்ஞான பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான சேவைக்காலப் பயிற்சி வகுப்பு ஒன்று இன்று வெள்ளிக்கிழமை காலை 8-30 மணி முதல் வட்டுக்கோட்டை இந்து கல்லூரியில் நடைபெறவுள்ளது. (139)

## ஜூலை 15 வரை விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

கல்விப் பொது தராதர சாதாரண பரீட்சை 1991க்கு விண்ணப்பிக்கும் தனிப்பட்ட பரீட்சார்த்திகள் ஜூலை 15ம் திகதிவரை விண்ணப்பிக்கலாம் என பரீட்சை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

அங்கீகரிக்கப்பட்ட பாடசாலையொன்றில் கற்றுக் கொண்டிராத எவரும் இப்பரீட்சைக்கு விண்ணப்பிக்க முடியுமென மேலும் அவர் தெரிவித்துள்ளார். (152)

யாழ். ஆஸ்பத்திரியில்

## குழந்தைகளுக்கான தடுப்பூசி போடப்படுகிறது

(யாழ்ப்பாணம்)

3-ம், 5-ம், 7-ம், 9-ம், 18-ம் மாதக் குழந்தைகளுக்கு ஏற்றப்படும் ஊசி மருந்துகள் 'லங்கா சிந்' கப்பலில் எடுத்து வரப்பட்டு நேற்று முன்தினம் வெளிநோயாளர் குழந்தைகள் சிகிச்சை நிலையத்தில் போடப்பட்டுவருகின்றன.

தொடர்ந்து பெற்றோர்கள் குழந்தைகளுக்கான ஊசி மருந்துகளை போட்டுச் செல்லலாம்.

இதேவேளை யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் சிகிச்சைப் பகுதி மேல் மாடியில் இயங்கிவந்த காது, மூக்கு, தொண்டை சிகிச்சை நிலையம் பழைய ஓ. பி. டி. பிரசவ சிகிச்சை நிலையத்தின் அருகில் கட்டப்பட்டுள்ள புதிய கட்டிடத்தில் நேற்று முதல் செயல்படத் தொடங்கியுள்ளதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன. (56)

## நிவாரணப் பணம் வழங்கப்படுகிறது

(சித்தன்கேணி)

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட தொழுநோய், காசநோய், புற்றுநோய் பிடிக்கப்பட்டவர்களுக்கான நிவாரணப்பணம் தற்போது வழங்கப்படுகின்றது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் வைத்து உதவி அரசாங்க அதிபர் திரு. து. வைத்திலிங்கத்தினால் சங்கானை உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட கிராமசேவை அலுவலர் பிரிவுகளில் தொழுநோய், காசநோய், புற்றுநோய் ஆகிய நோய்களினால் பீடிக்கப்பட்டு நிவாரணம் பெற்று வந்தவர்களுக்கு தை, மாசி, பங்குனி ஆகிய மூன்று மாதங்களுக்குமுரிய பணம் தற்போது வழங்கப்படுகின்றது. (137)

## பாடசாலை அதிபர்கள் பதவி உயர்வு பற்றி
## அமைச்சர் விளக்கம்

(கொழும்பு)

பாடசாலை அதிபர்கள் 2-ம் தரத்துக்கு பதவி உயர்வு வழங்கப்பட்டது புள்ளி விபரம் இன அடிப்படையில் தான் என்று கல்வி உயர்கல்வி அமைச்சர் லலித் அத்துலத் முதலி, பாராளுமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளார்.

அமைச்சர் இதுபற்றி மேலும் தெரிவிக்கையில் புள்ளி விபரம் இன அடிப்படையில், சிங்களவர் 151 புள்ளிகளையும், தமிழர் 145 புள்ளிகளையும், முஸ்லீம்கள் 135 புள்ளிகளையும், இந்தியத்தமிழர் 114 புள்ளிகளையும் பெற்றிருத்தல் வேண்டும்.

இதற்குக் குறைவான புள்ளிகளைப் பெற்றவர்கள் தெரிவு செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் கூறினார். (வி)

## கல்வி நிர்வாக சேவைக்கு
# 3-ம் தர அதிபர்கள்
## விரைவில் பதவி உயர்வு

(யாழ்ப்பாணம்)

மூன்றாம்தர அதிபர்களாக 1973ம் ஆண்டு முதல் பணியாற்றிய அனைவரையும் கல்வி நிர்வாக சேவையின் 3ம் வகுப்பிற்கு பதவி உயர்வு வழங்குமாறு கல்வி அமைச்சு சகல மாவட்டக் கல்விப்பணிப்பாளர்களுக்கும் பணித்துள்ளது.

3ம் தர அதிபர்களுக்கு 21-4-82 தொடக்கம் இலங்கை கல்வி நிர்வாக சேவை வகுப்பு ஐந்திலும், 1-1-85 தொடக்கம் கல்வி நிர்வாகசேவை மூன்றாம் வகுப்பிற்கும் பதவி உயர்வு வழங்கப்படும்.

மேற்படி 3ம் தர அதிபர்களில் 1-9-88க்குப் பின் கல்வி நிர்வாக சேவைக்கு பதவி உயர்த்தப்பட்டவர்களின் நியமன திகதியும் 21-4-82 ஆகவே கொள்ளப்படுமென்று மாவட்டக் கல்விப்பணிப்பாளர்களுக்கு அனுப்பப்பட்ட சுற்று நிருபத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

27-9-89க்கு முன் இடம் பெற்ற 3ம் தர அதிபர்களுக்கு இப்பதவி உயர்வு வழங்கப்படமாட்டாது என்றும். பதவி உயர்வு பெறவேண்டிய அதிபர்களின் விபரங்கள் யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தால் தற்போது திரட்டப்பட்டு வருவதாகவும் இவர்களுக்கு விரைவில் பதவிஉயர்வுகள் வழங்கப்படவுள்ளனவாகவும் கல்வித்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (வி)

## தீவுப்பகுதி நிவாரணம்
# மீள் பரிசீலனை

(ஊர்காவற்றுறை)

தீவுப்பகுதிகளிலிருந்து இடம்பெயர்ந்து வந்து அகதி முகாம்களில் தங்கியிருப்பவர்கள் முன்பு இருந்த இடங்களிலும் நிவாரணப் பொருட்கள் எடுப்பதாக தெரியவந்துள்ளது.

இதனுல் யாழ். செயலகத்திலுள்ள ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் கிராமசேவையாளர்களால் மேற்படி நிவாரணம் பற்றி மறுபரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. (53)

## உற்சவம்

(சித்தன்கேணி)

வட்டுக்கோட்டை அருள்மிகு ஸ்ரீ முருகையா ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 2-ம் திகதி செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகி தொடர்ந்து பத்து நாட்களுக்கு சிறப்பாக நடைபெற்று பத்தாம் நாள் 11-ம் திகதி வியாழக்கிழமை அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படவுள்ளது. (137)

## வடபகுதிக்குரிய எக்ஸ்ரே கருவிகள்
# தென்னிலங்கைக்கு அனுப்ப எடுத்த முயற்சி முறியடிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், பருத்தித்துறை ஆஸ்பத்திரிகளுக்குரிய எக்ஸ்ரே இயந்திரங்கள் யுத்த நிலைமையைக் காரணங்காட்டி காலி, அனுராதபுரம் வைத்தியசாலைகளுக்கு அனுப்ப எடுத்த நடவடிக்கை முறியடிக்கப்பட்டது.

ஜேர்மன் அரசின் உதவியுடன் வழங்கப்பட்ட எக்ஸ்ரே இயந்திரங்கள் கடந்த இரண்டு மாதங்களாக கொழும்பு வைத்திய உபகரண ஆய்வு சாலை களஞ்சியத்தில் வைக்கப்பட்டிருந்தபோது யுத்தநிலைமையை காரணங்காட்டி காலி போதனா வைத்தியசாலைக்கும் அனுராதபுர வைத்தியசாலைக்கும் இவற்றை அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டது.

மாகாணசபை புனர்வாழ்வு புனரமைப்பு செயலாளர் ஆர். யோகராஜன் யாழ் அரச அதிபர் கா. மாணிக்கவாசகர் ஆகியோரின் முயற்சியினால் மீண்டும் யாழ் வைத்தியசாலைகளுக்கு இந்த இயந்திரங்கள் கிடைக்கவிருக்கின்றன. (153)

## பரீட்சைகளுக்கு தோற்றமுடியாத நிலையில் காரைநகர் மாணவர்கள்

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் படையினரிடம் சிக்கியுள்ள மாணவர்கள் பலர் க. பொ. த (உயர்தர, சாதாரணதர) பரீட்சைக்கு தோற்ற முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது.

வடக்கு கிழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற உயர்தர பரீட்சையிலும் இவர்கள் தோற்றமுடியாது போய்விட்டது. மேலும் அடுத்த பரீட்சை ஆகஸ்ட் மாதம் 3ம் திகதி ஆரம்பமாவுள்ளது. இப்பரீட்சையிலும் இவர்கள் தோற்ற முடியாததொரு இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

## பென்சன் வவுச்சர்கள்

(யாழ்ப்பாணம்)

மே மாதத்துக்குரிய பென்சன் வவுச்சர்கள் யாழ். செயலக பென்சன் பிரிவுக்கு கொழும்பிலிருந்து நேற்று வந்துசேர்ந்துள்ளன.

விரைவில் மே மாத பென்சன் வவுச்சர்கள் ஓய்வூதியக்காரர்களின் விலாசங்களுக்கு தபாலில் அனுப்பிவைக்கப்படும். (153)

# இலங்கை - இந்திய ஒப்பந்தம் செயலிழந்து விட்டது!
## புதியதோர் ஒப்பந்தம் வேண்டும்

(சென்னை)

இந்திய - இலங்கை ஒப்பந்தம் செயலிழந்து விட்டது என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா தெரிவித்தார்.

செயலிழந்து விட்ட இந்த ஒப்பந்தத்திற்கு பதிலாக புதியதோர் ஒப்பந்தம் வேண்டுமெனவும் அவர் கேட்டுள்ளார்.

1987ல் அப்போதைய இந்தியப் பிரதமர் திரு. ராஜீவும் இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி திரு. ஜெயவர்த்தனவும் கைச்சாத்திட்ட மேற்படி ஒப்பந்தம் முற்றாகசெயலிழந்து விட்டது.

இதற்குப்பதிலாக இந்திய இலங்கை ஒப்பந்தம் ஒன்று உருவாகவேண்டும். இது தொடர்பாக தாம் மிக விரைவில் பிரதமர் திரு. நரசிம்மராவை சந்திக்கவுள்ளதாகவும் ஜெயலலிதா கூறினார். (இ)

### கிழக்கில் 7, 500

[1ம் பக்கத்தொடர்ச்சி]

உறவினர்கள் இதுசம்பந்தமாக மட்டக்களப்பு மாவட்ட சமாதான குழுவிற்கும் சகல விபரங்களடங்கிய தகவல்களைக் கொடுத்துள்ளார்கள்.

அம்பாறை மாவட்டத்தில் 2 200 தமிழர்கள் சிறீலங்கா இராணுவத்தால் கைது செய்யப்பட்டுக் காணாமற் போயுள்ளார்கள்.

திருகோணமலை மாவட்டத்தில் 1500 தமிழர்கள் சிறீலங்கா ஆயுதப் படையினரால் கைது செய்யப்பட்டு அதன் பின்னர் காணாமற் போயுள்ளதாகக் கூறப்படுகிறது. (153)

### கஷ்ட நிவாரண

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கிடைக்கவிருக்கிறது.

இதற்கான பூர்வாங்க வேலைகள் தற்போது முடிவடையும் நிலையில் இருப்பதாகவும், இவ்வூழியர்களுக்கு விரைவில் 18 மாதங்களுக்கான கஷ்ட நிவாரணப் பணம் ஒரே தடவையில் வழங்கப்படவிருப்பதாகவும் தெரியவருகிறது.

வடக்கு-கிழக்கு தவிர்ந்த மற்றைய மாகாணங்களுக்கு மேற்படி நிவாரணம் கடந்த வருடம் முற்பகுதியிலேயே வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (வி)

## பரீட்சைக் கட்டணங்கள்

(யாழ்ப்பாணம்)

1991ம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கு பாடசாலைமூலம் இரண்டாவது தடவை பரீட்சை எடுப்பவர்களுக்கு பரீட்சை ஆணையாளர் புதிய கட்டணங்கள் அறிவித்துள்ளார்.

ஒரு பாடம் 15 ரூபா, இரண்டு பாடங்கள் 20 ரூபா, மூன்று பாடங்கள் 25 ரூபா, நான்கு பாடங்கள் 30 ரூபா, ஐந்து பாடங்கள் 40 ரூபா, ஆறு பாடங்களும் அதற்கு மேலும் 50 ரூபா. முழுப் பரீட்சைக் கட்டணம் 50 ரூபா. (152)

### பாஸ்போர்ட்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யாழ். மேலதிக அரச அதிபர் மேல் ஒப்பம் இட்டால் கொழும்பு பாஸ்போர்ட் அலுவலகத்தில் உடனடியாக ஏற்றுக்கொள்ளப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

யாழ். அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் கொழும்பிலுள்ள குடிவரவு குடியகல்வு கட்டுப்பாட்டாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியதைத் தொடர்ந்து மேற்படி முடிவு எடுக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. [153]

### கூட்டுப்படைத்

[1ம் பக்கத் தொடர்ச்சி)

இத் தலைமையகத்திலிருந்தே வடக்கு-கிழக்கு பகுதிக்கான தாக்குதல்களுக்குத் திட்டங்கள் வகுக்கப்படுவதனால் மேற்படி தாக்குதல் தமக்குத் திருப்தியளிப்பதாகக் கூறினார்,

இதேவேளை இத்தாக்குதலுக்கு விடுதலைப் புலிகள் இயக்கம் பொறுப்பு ஏற்கிறதென்றோ அல்லது மறுக்கிறதென்றோ கூறவோ அவர் மறுத்துள்ளார் என வெரித்தாஸ் வானொலி தெரிவித்துள்ளது. (பூ)

### வீதியில் ஏற்படும்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

வராக சைக்கிள் ஓட்டிச் செல்லுங்கள், இருவரோ அல்லது அதற்கு அதிகமானோரோ ஒருவர் பக்கத்தில் ஒருவராக ஓட்டிச் செல்லாதீர்கள். ஓடிக்கொண்டிருக்கும் மோட்டார் வாகனம் அல்லது மோட்டார் சைக்கிள்களை பிடித்துக் கொண்டு செல்வதைத் தவிர்த்துக் கொள்ளுங்கள். குறிப்பாக மாணவ மாணவிகளே! உங்கள் உயரத்திற்கும் மிகப் பெரிதான சைக்கிள்வண்டியை ஓட்டாதீர்கள்: நீங்கள் வீதியால் சென்றுகொண்டிருக்கும் போது வாகனப்போக்குவரத்து தடை ஒன்று ஏற்படுமாயின், அந்த இடத்தில் உங்கள் காலை நிலத்தில் ஊன்றிக் கொள்ளக் கூடிய முறையில் ஆசனத்தை அமைத்துக் கொள்ளுங்கள். உங்கள் துவிச்சக்கரவண்டிகளில் பிறேக்-பெல், சீட் என்பன சரியான முறையில் பூட்டப்பட்டு அவ்வண்டிகளை ஓட்டக்கூடிய நிலையில் இருந்தால் மாத்திரமே அவற்றில் பிரயாணம் செய்யுங்கள்.

விரைவாகச்சென்று கொண்டிருக்கும் வாகனத்துக்குப் பின்னால் மிகவும் நெருக்கமாகச் செல்ல வேண்டாம்: அவ்வாகனம் திடீரென பிறேக் பிடித்தால் நீங்கள் அவ்வாகனத்துடன் மோதி விபத்துக்குள்ளாவது மட்டுமன்றி அநியாயமான உயிரிழப்புகளும் ஏற்படுவதற்கு வாய்ப்புண்டு என்பதை மனதில் கொள்ளுங்கள்.

வயோதிபர்கள், தாய்மார், சிறுவர்கள், குழந்தைகள், நோயாளிகள் ஆகிய பொதுமக்கள் வீதிகளைக் கடக்க நேர்ந்தால் அவர்களுக்கு வழிவிட்டுக் கொடுத்த பின்பு உங்கள் பயணத்தைத் தொடருங்கள்.

### சிறிலங்கா

(1ம் பக்கத் தொடர்ச்சி)

போராளிகள் இராணுவத்துடன் இணைந்து வடக்கு கிழக்கு பகுதிகளில் கடமையாற்றிவருகிறார்கள்.

தமது அமைப்பிலுள்ள பலர் தற்பொழுது இராணுவத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளதாக புளொட் உறுப்பினர் உறுதிப்படுத்தியுள்ளதாக வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

### ஈழ அகதிகள்

[1ம் பக்கத் தொடர்ச்சி]

மேற்கொண்டதாகவும், இந்நடவடிக்கை காரணமாக இலங்கைத் தமிழர் தங்கியிருக்கும் அகதி முகாம்களுக்கு பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாகவும் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார். (அ)

### 1990 ல் விண்ணப்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பற்றுவதற்கு புதிதாக விண்ணப்பிக்கலாம் என்று யாழ் கல்விப் பணிப்பாளர் இ. சுந்தரலிங்கம் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது இப்பரீட்சைக்குரிய கட்டணமாகரூபா 35/- செலுத்தி யூலை மாதம் 31ம் திகதிக்கு முன் தமது விண்ணப்பங்களை அனுப்பவேண்டும்.

ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் தங்கள் விண்ணப்பங்களின் பிரதிகளை பழைய பாடத்திட்டமாயின் யாழ். கல்விப் பணிப்பாளருக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும்.

புதிய பாடத்திட்டமாயின் தாம் கடைசியாகப் படித்த அதிபர் மூலமாக தங்கள் விண்ணப்பங்களின் பிரதிகளை கல்விப் பணிப்பாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும்.

1990ம் ஆண்டு டிசம்பர் பரீட்சையில் முதன் முறையாக பாடசாலை மூலம் விண்ணப்பித்து, 91ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றுவதற்கு உள்ள மாணவர்கள் வயது எல்லைக்குட்பட்டிருந்தால் புதிய கட்டணமாக ரூபா 50/- செலுத்தி விண்ணப்பிக்கலாம்.

ஆகஸ்ட்டில் 1991ம் ஆண்டுக்கான கல்விப்பொதுத்தராதர உயர்தர பரீட்சை ஒழுங்காக நடைபெற்றால் அடுத்து சில தினங்களில் 1990ம் ஆண்டுக்கான கல்விப் பொதுத்தராதர சாதாரண விசேட பரீட்சைநடைபெறும். (152)

### மேலும் பல

[1-ம் பக்கத் தொடர்ச்சி)

தலைப் புலிகள் எனப் பாவனை செய்து கொண்டு கொள்ளையில் ஈடுபட்டுக்கொண்டிருந்த கொள்ளையர்களில் கைது செய்யப்பட்டவர்கள் விபரம் கீழ் வருமாறு:-

ஜெயராசா நந்தகுமார் (கண்ணன்), சுழிபுரம்கிழக்கு, சுழிபுரம். செல்லத்துரை பாராஜலிங்கம் (ராஜன்), 5/1, ஸ்ரான்லி கல்லூரி வீதி, அரியாலை. பொன்னுத்துரை விஜயகுமார் (குஞ்சன்) செட்டிக்குறிச்சி, இல்லாலை, பண்டத்தரிப்பு. குழந்தையன் செல்வராஜா (பெரியராஜா), ... வளை, சண்டிலிப்பாய், கந்தசாமி உதயவேந்திரன், (அப்புலிங்கன்), செட்டியார்புரம் அராலி, பாலசிங்கம் திருச்செல்வம் (சின்னராசா) ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, ஜெயராசா ஜெயக்குமார் (குமார்) சுழிபுரம் கிழக்கு, சுழிபுரம், சின்னக்குட்டி இந்திரன் (ரூபன்) பாரதிலேன், சங்கானை, கார்த்திகேசு கந்தசாமி (ஜெயம்) தனைவோடை, மல்லாகம், சுப்பிரமணியம் சுதாகர், (சுதா), கைதடி நுணாவில், சாவகச்சேரி.

இக்கொள்ளைக் குழுவைச் சேர்ந்த மேலும் பலரை விடுதலைப் புலிகள் தேடிவருவதாக தெரிவிக்கப்படுகிறது.

### இந்தியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ராஜீவ் கொலையுடன் சம்பந்தப்பட்டவர்களெனக் கருதப்படும் இருவரின் புகைப்படங்களை தொலைக்காட்சியில் காண்பிக்குமாறு விசாரணைக் குழுவினர் கேட்டபோது ஒரு தடவை மட்டும் அதுவும் ஆங்கிலச் செய்தி அறிக்கையில் மாத்திரம் காண்பிக்கப்பட்டதாம்.

இதேபோல மாலைதீவு சதிப்புரட்சியில் ஈடுபட்டவர்களில் சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் புளொட் உறுப்பினர்களை இக்குழுவினர் விசாரணை செய்ய அனுமதிக்குமாறு கேட்ட போது இலங்கை அரசு மறுத்துவிட்டதாம்.

### அநுராபுரத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

புலிகள் நடாத்திய தாக்குதலில் ஒரு சிப்பாய் படுகாயமடைந்துள்ளார். (அ)

### ராஜீவ்காந்தி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இடமளித்ததாகவும், ராஜீவ் காந்தி கொலை தொடர்பான முக்கிய ஆவணங்கள் இவரது வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டதையடுத்தே இவர் கைது செய்யப்பட்டதாக பொலிசார் தெரிவித்தனர்.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக ஜெயக்குமாருடன் சேர்த்து இதுவரையில் 7 பேர் கைது செய்யப்பட்டதாகவும் பொலிஸ் வட்டாரங்கள் மேலும் தெரிவித்தனர். (அ)

### இரகசியத் தகவல்

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

கிறது.

கொழும்பு நகரில் நடமாடுவோர் மீதும், சந்தேகத்துக்கு இடமானோர் மீதும் தீவிர கண்காணிப்புச் செலுத்தும் நோக்குடன் வீதிகள், சந்திகள் மற்றும் முக்கிய இடங்களில் பாதுகாப்புப் படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

பொலிஸாரின் இந்த எச்சரிக்கையைத் தொடர்ந்து கொழும்பு நகரெங்கும் பெரும் பதற்றம் நிலவுகிறது.


## அறிவித்தல்

யாழ். விஞ்ஞான மன்றமும்
பனை தென்னைவள அபிவிருத்தி ஒன்றியமும்
இணைந்து நடாத்தும்

## பனைவள ஆய்வரங்கும் கண்காட்சியும்

காலம்: 29, 30-06-1991 காலை 9.00 மணி

இடம்: யாழ். பல்கலைக்கழகம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

- ஒருங்கிணைப்புக்குழு

[எ 1469]


இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1991-ம் ஆண்டு ஜூன் மாதம் 28ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Registered as a News Paper at the General Post office Sri Lanka under license Number B/180396/81